நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுக் கேற்ப நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டுமென்று பெயர் தந்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிமிடம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி எல்லோரும் என்னுடன் ஒத்துழைத்து, பெயர் கொடுத்துள்ள எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் கிடைக்கும்படி, குறிப்பிட்ட நிமிடத்திற்குள் தங்கள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். திரு. எஸ். ஆர். இராதா.

(1) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஈ) ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெறுமுன் வெளியில் கருத்துக்களை கூறி அவை பிரசுரிக்கப்படுவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : சார், On a point of order, பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடைபெறுவதற்கு முன்னால் அதுபற்றிய கருத்துக்களை வெளியில் கூறுவதும், அதைச் செய்தித் தாளில் பிரசுரிப்பதும் ஒழுங்குதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அதுபற்றி உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப விரும்பினால், அதை எழுத்துமூலம் கொடுங்கள். நான் அதைப் பரிசீலித்து என்னுடைய முடிவினைத் தெரிவிக்கிறேன்.

4. விளக்கம் கோரல்.

அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் உரிமை மீறல் பற்றிய தீர்மானம் ஆகியவைபற்றி குறிப்பிடப்படாதது பற்றி.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, விதி 42 இன் கீழ் பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். பேரவை விதிப்படியே அவை கூடுவதற்கு முன்பாகவே கொடுத்திருக்கிறோம். மற்ற அலுவலை எடுத்துக்கொள்வதற்கு முன்பு அந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதி சொல்கிறது. அவற்றைப் பற்றி தாங்கள் எதுவும் சொல்லவில்லை.

அதோடு அவை உரிமை மீறல் பற்றி 'அண்ணா' பத்திரிகையின் மீது ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவை தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினையை நாளை எடுத்துக்கொள்ள இருக்கிறோம் என்று என் அறையில் சொல்லி யிருக்கிறேன்

திரு. மு. கருணாநிதி: உரிமைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்த அவையில் முன்மாதிரியாக இருப்பது, உரிமைப் பிரச்சினையை உடனடியாக எடுத்துக்கொள்வது, அதற்குப் போதுமான ஆதாரங்கள், விவரங்கள் இல்லாத நிலைமையில், அந்த உரிமைப் பிரச்சினைபற்றி அவையில் படித்து, நாளையதினம் எடுத்துக்கொள்வோம் என்று அறிவிப்பது வழக்கம். அதைப் போல தாங்கள் இன்று அறிவிக்கவில்லை என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனி அடுத்து வருகிற உரிமைப் பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளும்போது இதுபற்றி யோசிக்கிறேன்.

(5) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

* திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நேற்று ஆற்றிய உரைக்குக் கீழ்க்கண்ட நன்றி கூறும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள், 7 ஆம் தேதி அன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"
என்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

@ 199-205 ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பெற் றுள்ளது.

@ 206-215 ஆம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப் பெற்ற ஆளுநர் உரையின் தமிழாக்கம் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.